13.08.2024

<u>கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.</u>

<u>அமர்வு வழக்கு எண். 205/2018</u>

அ.சா.23

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மணிகண்டன் | | |
| த/பெ | ராகவன் | | |
| கிராமம் | விழுப்புரம் | தொழில் | |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | 39/2024 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | |

**இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.**

**<u>முதல் விசாரணை</u>**

**நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது** விழுப்புரம் இரயில்வே நிலையத்தில் என் ஆட்டோவை நிறுத்தி தொழில் செய்து வருகிறேன். என் ஆட்டோ பதிவெண் டிஎன் 32 ஏசி0850 ஆகும். இரயில்வே காவல் நிலையத்திற்கு அருகில் தான் என் ஆட்டோ ஸ்டேன்ட் உள்ளது. அந்த காவல் நிலையத்தில் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாகவும் எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் இந்த வழக்கு சம்மந்தமாக என்னை விசாரணை செய்யவில்லை. ஆனால் இந்த வழக்கு சம்மந்தமாக ஒரு நீதித்துறை நடுவர் என்னை விசாரணை செய்தார். அவரிடம் நான் கையெழுத்து எதுவும் போடவில்லை. நான் பார்த்தால் என்னுடைய கையெழுத்தா இல்லையா என்று சொல்லமுடியுமா என்றால் சொல்லமுடியும். என்னிடம் காண்பிக்கப்படும் நீதித்துறை நடுவரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து அ.சா.ஆ.9 ஆகும். அந்த நீதித்துறை நடுவர் விசாரித்தது எப்போது என்று எனக்கு ஞாபகமில்லை. அவர் என்றைய நடந்த தேதியில் நடந்த சம்பவம் குறித்து விசாரித்தார் என்றும் எனக்கு ஞாபகமில்லை.

**(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரி**

அனுமதி வழங்கப்பட்டது.)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 07.05.2014ம் தேதி காலை சுமார் 10 மணிக்கு நான் ஆட்டோ ஸ்டேன்டில் இருந்தபோது காவல் நிலையத்தின் முன்பக்கமாக சட்டை எதுவும் அணியாமல் வெறும் லுங்கி மட்டும் கட்டியிருந்த ஒரு ஆளை தலை தொங்கிய நிலையில் 3 போலீஸ்காரர்கள் கூட்டி கொண்டு வந்து காவல் நிலைய டாட்டா சுமோவில் பின் பக்க சீட்டில் சாய்த்து உட்கார வைத்தார்கள் என்றும், அவரை 2 போலீசார் பிடித்தவாறு உட்கார வைத்தார்கள் என்றும், முன் சீட்டில் ஆய்வாளர் வாசுதேவன் உட்கார்ந்த உடன் ஓட்டுனர் திருக்குமரன் வேகமாக வண்டியை ஓட்டி சென்றார் என்றும், ஆட்டோ நிறுத்தத்தில் இருந்த சுரேஷ்குமார் மற்றும் விஜயகுமார் என்ற இரு ஆட்டோ டிரைவர்கள் இதை பார்த்தார்கள் என்றும் சொன்னேன் என்றால் சரியல்ல.

அன்றைய தினமே மதியம் 3 மணியளவில் உள்ளூர் போலீசார் நிறைய பேர் காவல் நிலையத்திற்கு வந்தார்கள் என்றும், காவல் நிலையமே பரபரப்பாக இருந்தது என்றும், இரயில்வே நிலையத்தில் புத்தகம் விற்கும் ஜெயவேல் என்பவரை காவல் நிலையத்தில் 2 நாட்கள் வைத்து அடித்து உள்ளார்கள் என்றும், அடிதாங்காமல் அவர் மருத்துவமனைக்கு செல்லும் வழியில் இறந்து விட்டதாக தெரிந்து கொண்டேன் என்றும், உடனிருந்த ஆட்டோ டிரைவர்கள் 2 நாட்களாக அவனுக்கு சரியான உதை விழுந்து கொண்டிருந்தது என்றும், அவர் அய்யோ அம்மா, அப்பா என்று அலரும் சத்தம் கேட்டு கொண்டிருந்தது என்று அவர்கள் சொன்னார்கள் என்றும், விழுப்புரம் நீதித்துறை நடுவர், விழுப்புரம் சிபிசிஐடி போலீசார் மற்றும் வேலூர் சிபிசிஐடி ஆய்வாளர் ஆகியோர்கள் விசாரித்தார்கள் என்றும், விசாரணையில் மேற்படி சங்கதிகளை சொல்லிவிட்டு எதிரிகள் கேட்டு கொண்டதன் பேரில் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை

**மறுவிசாரணை**

இல்லை